


கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பாக 480 மகளிர் சுய உதவி குழுக்களைச் சேர்ந்த 888 பயனாளிகளுக்கு ரூ.53 கோடியே 11 இலட்சம் மதிப்பிலான கடன் இணைப்புக்கான ஆணைகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் , கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ் (ஓசூர்), ஆகியோர் வழங்கினார்கள். உடன் ஊரக வாழ்வாதார திட்ட இயக்குநர் பி.பெரியசாமி,கூட்டுறவு சங்கங்கள் இணை பதிவாளர் நடராஜன், முன்னோடி வங்கி மேலாளர் சரவணன், உள்ளிட்ட பலர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் அவர்கள் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு மாநில அளவிலான மணிமேகலை விருது மற்றும் வங்கி கடன் இணைப்புகளை வழங்கியதை தொடர்ந்து அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மருத்துவக்கல்லூரி அனிதா அரங்கத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் உறுப்பினர்களுக்கு கடனுதவிகளை போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா , ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.



முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்டம், பல்லடம் மேற்கு ஒன்றியக் கழகத்தின் சார்பில் ஒன்றிய கழக அலுவலகத்தில் ஒன்றியச் செயலாளர் சு.கிருஷ்ணமூர்த்தி தலைமையில் கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் அவைத் தலைவர் சாமிநாதன், துணைச் செயலாளர் ஆட்டோ குமார், மாவட்ட பிரதிநிதிகள் அன்பரசன், துரைமுருகன், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ராஜேஸ்வரன், தகவல் தொழில்நுட்ப அணி பாலகுமார், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பிரகாஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர் கதிர், ஆதிதிராவிடர் அமைப்பாளர் முனியன், சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் ரமேஷ், தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் வெள்ளிங்கிரி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஆட்சியர் மருத்துவர். ச.உமா தலைமை! - கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. – வி.எஸ்.மாதேஸ்வரன் எம்.பி. – பெ.ராமலிங்கம் எம்.எல்.ஏ. முன்னிலை!

# இராசிபுரத்தில் 1,104 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.77.57 கோடியில் வங்கி கடன் இணைப்பு - கடனுதவிகள்!

## அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் வழங்கினார்!

நாமக்கல், ஜூன். 14–

சென்னை, கலைவாணர் அரங்கில் மகளிர் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் உதவி, 2024 –2025 ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருது, மாநில அளவில் நடைபெற்ற பன்முக கலாச்சார போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசு மற்றும் நல உதவித்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மகளிர் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு சென்னை, கலைவாணர் அரங்கில் மகளிர் சுய உதவிக்குழு தினத்தை முன்னிட்டு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் உதவி, 2024 –2025 ஆம் ஆண்டிற்கான மணிமேகலை விருது, மாநில அளவில் நடைபெற்ற பன்முக கலாச்சார போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு சான்றிதழ்கள், பரிசு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் நகராட்சி, சுஜிதா திருமண மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர். ச.உமா தலைமை தாங்கினார். நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ. ராம லிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு 1,104 மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு ரூ.77.57 கோடி மதிப்பீட்டில் பல்வேறு கடனுதவிகளை வழங்கி, பேசும்போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவிற்கு இணங்க இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்துார் வட்டாரங்கள், இராசிபுரம் நகராட்சி, அத்தனூர், வெண்ணந்தூர், பிள்ளாநல்லூர், ஆர்.புதுப்பட்டி, நாமகிரிப்பேட்டை, சீராப்பள்ளி மற்றும் பட்டணம் பேரூராட்சிகளில் உள்ள மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் ஊரக பகுதிகளில் 9,043 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 1,02,552 உறுப்பினர்களும் மற்றும் நகர்ப்புற பகுதிகளில் 3,985 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 41,380 உறுப்பினர்களும் என மொத்தம் 13,028 மகளிர் சுய உதவிக்குழுக்களில் 1,43,932 உறுப்பினர்களின் சமூகம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டு வருகிறது.

ஊரகம் மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 2021 – 2022 ஆம் ஆண்டு 9,081 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.499.20 கோடி மதிப்பிலும், 2022–2023 ஆம் ஆண்டு 10,751 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.658.62 கோடி மதிப்பிலும், 2023–2024 ஆம் ஆண்டு 10,082 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.674.69 கோடி மதிப்பிலும், 2024–2025 ஆம் ஆண்டு 14,516 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.886.00 கோடி மதிப்பிலும் மற்றும் 2025–2026 ஆம் ஆண்டு 1,562 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.113.96 கோடி மதிப்பிலும் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும் இன்று நடைபெறும் விழாவில் 1,091 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.77.16 கோடி வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டது.

இவற்றில் ஊரக பகுதிகளில் 805 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு இதுவரை (10,615 பயனாளிகள்) ரூ.77.57 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை நாமக்கல் மாவட்டத்தில் 2021 –2022 ஆம் ஆண்டு முதல் நாளது தேதி வரை 45,992 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.2,832.47 கோடி வங்கி கடன் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டம், போதமலையில் கீழூர், மேலூர், கெடமலையை இணைக்கும் வகையில், ரூ.139.65 கோடி மதிப்பீட்டில், 31 கிலோ மீட்டர் நீளத்திற்கு சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இராசிபுரம் தொகுதியில் ரூ.53.39 கோடி மதிபில் அரசு மருத்துவமனை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. இது போன்ற பல்வேறு அடிப்படை வசதிகள் இராசிபுரம் தொகுதியில் நிறைவேற்றப்பட்டுள்ளது என அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார் .

தொடர்ந்து கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் பேசும்போது, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வகையிலும், பெண்களின் வாழ்க்கை தரத்தை ஊக்குவிக்கும் வகையிலும் பல்வேறு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார். முதல்வர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு மகளிருக்கான விடியல் பயணம், மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு தொழில் கடன் தள்ளுபடி, வங்கிகளில் 5 பவுன் வரை நகை கடன் தள்ளுபடி, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தி உள்ளார்.

புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், ஏழை, எளிய குழந்தைகளின் பசியினை போக்கிட பள்ளிகளில் காலை உணவுத் திட்டம், மகளிருக்கும் கலைஞர் உரிமைத் தொகை. கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் நாமக்கல் மாவட்டத்தில் சுமார் 6,500 பயனாளிகளுக்கு தலா ரூ.3.50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் அரசு பணிகளுக்கான தேர்வுகளில் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் அதிகளவில் பயன்பெற வேண்டுமென்று அரசு தேர்வின் தமிழ் கட்டாய பாடத்தை அறிவித்தார்கள். இதன் மூலம் படித்த இளைஞர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில், இராசிபுரம் நகர்மன்ற தலைவர் முனைவர். கவிதா சங்கர், துணை தலைவர் கோமதி ஆனந்தன், ஒன்றிய திமுக செயலாளர் கே.பி ராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர். எம்.துரைசாமி, வெண்ணந்தூர் பேரூராட்சி தலைவர் ராஜேஷ், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) /திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) (பொ) சு.வடிவேல், உதவித்திட்ட அலுவலர் அ.காளிதாஸ், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், சமுதாய அமைப்பாளர்கள், மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டார்.




